DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : திரு.மூக்கையா | Father/Husband Name : அங்கமுத்து |
| Age : 48 | Village : பண்டுதன்பட்டி |
| Taluk : | Calling : சிறப்பு சார்பு ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 27.04.026

( Accused Present).

**முதல் விசாரணை** :-

1. நான் தற்போது சாத்தூர் தாலுகா காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2. சாத்தூர் தாலுகா காவல் நிலையத்தில் பணியாற்றிய உதவி ஆய்வாளர் திரு.பழனி மற்றும் காவல் ஆய்வாளர் செல்லப்பாண்டி ஆகியோர்களையும், அவர்களுடைய கையெழுத்தும் எனக்கு தெரியும். அவர்கள் இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, புலன் விசாரணை செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்து என்னால் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்க முடியும்.

3. கடந்த 17.08.2021ம் தேதி காலை 07.00 மணியளவில் சார்பு ஆய்வாளர் திரு.பழனி நிலைய அலுவலில் இருந்தபோது ஸ்ரீமான் மகன் தவசி கொடுத்த புகார் மனுவை பெற்று புகார் மனுவின் தன்மைகேற்ப நிலைய குற்ற எண் 173/2021 பிரிவுகள் 279, 304A இ.த.ச (Hit & Run) -ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். முதல் தகவல் அறிக்கையுடன் அசல் புகார் மனுவை இணைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். (**முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

4. இவ்வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட காவல் ஆய்வாளர் செல்லப்பாண்டி 17.08.2021 ம் தேதி காலை 08.15 மணியளவில் சம்பவ இடம் சென்று ராமர் மற்றும் சுதாகர் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்துள்ளார். **(பார்வை மகஜர் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மாதிரி வரைபடம் அ.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

5. பின்னர் சாட்சிகள் தவசி, ராஜலிங்கம், பாண்டி, பொன்மலர், சிவக்குமார், காட்வின்ராஜா, சந்திரசேகர் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

6. பின்னர் 17.08.2021ம் தேதி சாத்தூர் அரசு மருத்துவமனையில் வைத்து இறந்துபோன ஸ்ரீதர் என்பவரின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார்கள் முன்பாக பிரேத விசாரணை செய்து அறிக்கை தயார் செய்துள்ளார். **(பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்பு பிரேத விசாரணை சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் பிரேதத்தை தலைமை காவலர் சதீஸ்குமார் என்பவரிடம் வேண்டுகோள் கடிதம் கொடுத்து அரசு மருத்துவரிடம் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்வதற்காக ஒப்படைக்க அனுப்பியுள்ளார்.

7. இவ்வழக்கில் விபத்துக்குள்ளான TN 72 G 0303 என்ற பதிவெண் கொண்ட Royal Enfield இருசக்கர வாகனம் மற்றும் TN 30 U 6639 பதிவு எண் கொண்ட லாரி ஆகிய வாகனங்களை ஆய்வு செய்த விருதுநகர் வட்டார போக்குவரத்து மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.செல்வராஜ் என்பவரை விசாரணை செய்து மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்று அவருடைய வாக்குமூலத்தினை பதிவு செய்துள்ளார். **(TN 72 G 0303 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்திற்கான மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.6 ஆகவும், TN 30 U 6639 பதிவு எண் கொண்ட லாரிக்கான**

<u>மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)</u>

8. பின்னர் இவ்வழக்கில் இறந்த ஸ்ரீதரின் இறப்பை உறுதி செய்த சாத்தூர் அரசு மருத்துவமனை மருத்துவர் என்பவரை விசாரணை செய்து அவரிடமிருந்து வாக்குமூலத்தினை பதிவு செய்துள்ளார்.

9. பின்னர் இவ்வழக்கில் வாகனவிபத்தில் இறந்து போன ஸ்ரீதர் என்பவரது பிரேத பரிசோதனையின் போது சேகரிக்கப்பட்ட உள் உறுப்புகளை இராமநாத வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைப்பு செய்த முதல் நிலை காவலர் செல்ல முனியாண்டி என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் இவ்வழக்கில் இறந்து போன ஸ்ரீதரின் உள் உறுப்புகளை பகுப்பாய்வு செய்ய இராமநாதபுரம் வட்டார தடய அறிவியல் ஆய்வாளர் திரு.கோவிந்தராஜ் என்பவரை விசாரணை செய்து அவருடைய வாக்குமூலத்தை பதிவு செய்து ஸ்ரீதரின் உடல் உள்உறுப்புகளின் பகுப்பாய்வு ஆய்வறிக்கையை பெற்றுள்ளார். <u>(பகுப்பாய்வு ஆய்வறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)</u> பின்னர் இவ்வழக்கில் இறந்து போன ஸ்ரீதர் என்பவரின் பிரேதத்தினை பிரேத பரிசோதனை செய்த சாத்தூர் அரசு மருத்துவமனை மருத்துவர் மரிய கிரேஷ் மோனிஷா என்பவரை விசாரணை செய்து அவரிடமிருந்து பிரேதபரிசோதனை அறிக்கை மற்றும் இவ்வழக்கில் இறந்து போன ஸ்ரீதர் என்பவரது இறப்பிற்கான காரணம் குறித்த இறுதி கருத்துரை சான்று பெற்று அவரது வாக்குமூலத்தினை பதிவு செய்துள்ளார். (<u>பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.9 ஆகவும், இறுதி கருத்துரை சான்று அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது</u>). பின்னர் தலைமை காவலர்கள் செல்லமுனியாண்டி, முதல் நிலை காவலர் சதீஸ்குமார், தலைமை காவலர் ராஜா மாணிக்கம், மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் பழனி ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

10. பின்னர் 10.11.2021ம் தேதி சாத்தூர் தாலுகா காவல்நிலையத்தில் ஆஜரான எதிரியை கைது செய்து தக்க நிலைய பிணையில் விடுவித்துள்ளார்.

11. பின்னர் தனது விசாரணையிலிருந்தும், சாட்சிகளின் விசாரணையிலிருந்தும் சம்பவம் உண்மை என தெரியவந்து எதிரி மீது பிரிவுகள் 279, 304A இ.த.ச –ன் கீழான குற்றங்களுக்கு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –</u>

12. பொய்யான புகார் மனு பெற்று, எதிரிக்கு எதிராக இந்த வழக்கு பொய்யாக பதிவு செய்யயப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் எதிரிக்கு எதிராக காவல் நிலையத்தில் வைத்து உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கிற்கும், எதிரிக்கும் எவ்விதமான சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரியை சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு விபத்து எதிரியின் கவனக்குறைவால் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate 2, Sattur.